# சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லாபம் ரூ.220 கோடி

Chola
Enter a better life

**சென்னை, ஏப். 28:** முருகப்பா குழுமத்தைச் சேர்ந்த சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் & பைனான்ஸ் நிறுவனம் நான்காம் காலாண்டில் ரூ.220 கோடி நிகர லாபம் ஈட்டியது.

இதுகுறித்து அந்த நிறுவனம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஜனவரி-மார்ச் வரையிலான நான்காவது காலாண்டில் ரூ.665.88 கோடியை நிகர வருவாயாக ஈட்டியது. 2015-16 நிதி ஆண்டில் ஈட்டிய நிகர வருவாய் ரூ.603.42 கோடியுடன் ஒப்பிடுகையில் இது 10 சதவீதம் அதிகமாகும். நிகர லாபம் 14 சதவீதம் அதிகரித்து ரூ.220 கோடியாக காணப்பட்டது.

சென்ற 2016-17 முழு நிதி ஆண்டில் வருவாய் ரூ.2,142.94 கோடியிலிருந்து 13 சதவீதம் அதிகரித்து ரூ.2,429.55 கோடியாக இருந்தது. நிகர லாபம் 26 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.719 கோடியாக காணப்பட்டது.

சென்ற நிதி ஆண்டுக்கு பங்குதாரர்களுக்கு ரூ.10 முகமதிப்பு கொண்ட பங்கு ஒன்றுக்கு ரூ.2 (20%) இறுதி ஈவுத்தொகையாக வழங்க இயக்குநர்கள் குழு பரிந்துரைத்துள்ளதாக சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் & பைனான்ஸ் நிறுவனம் அந்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.